# மிதிவண்டி ஓட்டுநர்கள் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் ஓட்டிச்செல்ல விரைவான உதவிக் குறிப்புகள்.




தடம் மாறுவதற்கு முன் அல்லது திரும்புவதற்கு முன், கை சமிக்ஞைகளைப் பயன்படுத்துங்கள். **விதிமுறை**




இரவு 7 மணி முதல் காலை 7 மணி வரை முன்புற, பின்புற விளக்குகளை எரியவிடுங்கள். **விதிமுறை**

நீங்கள் அணிந்திருக்கும் உடை பிரகாசமான நிறத்தில் இருப்பதையும் ஒளியைப் பிரதிபலிப்பதையும் உறுதிப்படுத்துங்கள்.

சாலையைப் பயன்படுத்தும் மற்றவர்களுக்கு நீங்கள் தெரிவதை உறுதி செய்யுங்கள்: பெரிய வாகனங்களின் பார்வையில் படாத இடங்களில் ஓட்டிச் செல்வதையும், போக்குவரத்தின் ஊடே வளைந்து வளைந்து ஓட்டிச் செல்வதையும் தவிர்த்திடுங்கள்.




மிதிவண்டி ஓட்டும்போது கைப்பேசிகளைப் பயன்படுத்தாதீர்கள். கைப்பேசிகளை மிதிவண்டியில் பொருத்தி வைத்திருங்கள். **விதிமுறை**




சாலைகளில் ஓட்டிச்செல்லும்போது தலைக்கவசம் அணியுங்கள். **விதிமுறை**

விரைவுச்சாலைகளிலும் சுரங்கச் சாலைகளிலும் ஓட்டக்கூடாது. **விதிமுறை**

மிதிவண்டி ஓட்டுநர்கள் கூடுமானவரை சாலையின் இடதுபக்க ஓரத்திலேயே எப்போதும் ஓட்டிச்செல்ல வேண்டும். **விதிமுறை**

ஒற்றைத்தடச் சாலைகளிலும் பேருந்து தடம் நடப்பிலிருக்கும் நேரங்களிலும் இணைசேர்ந்து ஓட்டிச்செல்லக்கூடாது. 2 அல்லது அதைவிட அதிக தடங்கள் கொண்ட சாலைகளில், அதிகபட்சம் 2 மிதிவண்டி ஓட்டுநர்கள் இணைசேர்ந்து ஓட்டிச்செல்லலாம். **விதிமுறை**

மிதிவண்டி குழுக்கள் 5 மிதிவண்டிகளின் நீளத்தைவிட அதிகமாக இருக்கக்கூடாது. (ஒற்றை வரிசையில் 5 மிதிவண்டி ஓட்டுநர்கள், அல்லது இரு வரிசைகளில் 10 மிதிவண்டி ஓட்டுநர்கள். **விதிமுறை**

மிதிவண்டி ஓட்டிச்செல்லும் குழுக்கள் தங்களுக்கு இடையில் குறைந்தது 30 மீட்டர் அல்லது 2 விளக்குக் கம்பங்களின் தூரத்தை நிலைநாட்டவேண்டும்.



விதிமுறைகளை மீறுவோர் தண்டிக்கப்படுவார்கள்.

Land Transport Authority
We Keep Your World Moving

SINGAPORE POLICE FORCE
SAFEGUARDING EVERY DAY